Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 331 | வியாழக்கிழமை | ஐப்பசி 11 ஆம் நாள் 28 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொற்று 559 சாவு 20

கொழும்பு, ஒக். 28
இலங்கையில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். 14



# கோத்தாபய மற்றும் படை அதிகாரிகள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்கு!

### 200 தமிழர்கள் சார்பில் நேற்றுத் தாக்கல்செய்யப்பட்டது
### கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்கவும் கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 28
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உட்பட இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு எதிராக 200 ஈழத்தமிழர்களால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (Prosecutor of the Internatinal Criminal Court (ICC) நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 14

## ஒரே நாடு ஒரே சட்டத்துக்காக ஞானசாரர் தலைமையில் செயலணி!

### நியமித்தார் ஜனாதிபதி கோத்தாபய
### தமிழருக்கு இடமில்லை

கொழும்பு, ஒக். 28
பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தலைமையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கட்டளையின் பிரகாரம் இதற்கான 14

வறுமையின் கொடுமை

## 3 பிள்ளைகளுக்கும் விஷம்கொடுத்து தானும் உயிர்மாய்க்க முற்பட்ட தாய்!

கொழும்பு, ஒக். 28
ஹாலிஎல வேவல்ஹின்ன தோட்டத்தைச் சேர்ந்த தாயொருவர், தனது 3 பிள்ளைகளுக்கும் விஷத்தை கொடுத்து, தானும் விஷம் அருந்திய நிலையில், நால்வரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அவர்கள் தற்போது பதுளை 12

யாழ். ஆரிய குளத்தில்

## மத அடையாளங்களுக்கு ஒருபோதும் இடமில்லை!

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்.மாநகர சபையின் சொத்தாக இருக்கும் ஆரியகுளத்தில் எந்த விதமான மத அடையாளங்களையும் அமைக்க முடியாது என யாழ். மாநகர சபையில் 11

## ஈழத்தமிழரின் கடும்வெறுப்பை வெகுவிரைவில் சம்பாதிப்பீர்கள்!

கோத்தாவுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 28
"ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் மனதைச் சீண்டி கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு 14

## அருமைநாயகம், சார்ள்ஸுக்கு புதிய பதவிகள்

கொழும்பு, ஒக். 28
கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் செயலர் சுந்தரம் அருமைநாயகத்தை 14

## கோபுரத்தில் ஏறிநின்று உயிர்மாய்க்க முயற்சி

வவுனியா, ஒக். 28
வவுனியா தேக்கவத்தை பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறிய இளைஞர் ஒருவர் உயிர்மாய்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதனைத் தடுக்கும் 14

## இந்திய மீனவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 28
எல்லைமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், யாழ்ப்பாணச் 12

## வவுனியாவில் நாளை ஆர்ப்பாட்டம்


வவுனியா, ஒக். 28
வவுனியா வடக்கில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் செயற்பாட்டுக்கு எதிராக வவு 14

## சிறுமி உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 28
கோப்பாய் ஊரெழுபகுதியில் வசித்துவந்த சிறுமி 12

## தாழமுக்கத்தால் வடக்கில் மழை

யாழ்ப்பாணம், ஒக். 28
இலங்கைக்கு தென்கிழக்குப் பகுதியில் வங்கக்கடலில் காணப்படும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி இன்று மாலை 11




## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 28
தெல்லிப்பழை கிழக்கு பகுதியில் வசித்துவந்த 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர் 11

## இந்தியா பருப்பு போட்டதுபோல சீனா உரத்தை இறக்க முயற்சி!

கொழும்பு, ஒக். 28
"அன்று இந்தியா பலவந்தமாக பருப்பு போட்டதுபோல இன்று பலவந்தமாக இலங்கையில் 11



# பிரதேசசபைச் செயலாளரை இடமாற்றக்கோரி போராட்டம்

மன்னார்,ஒக்.28
மாந்தை மேற்குப் பிரதேசசபையின் செயலாளரை இடமாற்றக்கோரி, சபை உறுப்பினர்கள், பிரதேச சபைக்கு முன்பாக நேற்று அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சபையின் செயலாளரின் ஆளுமையற்ற செயற்பாட்டாலும், வினைத்திறன் அற்ற முடிவுகளாலும் அபிவிருத்திகள் மற்றும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் பின்னோக்கிக் காணப்படுகின்றன. எழுத்து மூலச் செயற்பாடுகள் மட்டுமே இடம்பெறுகின்றன. பௌதிகச் செயற்பாடுகள் எவையும் இடம் பெறுவதில்லை என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். சபையின் செயலாளர் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார். குறிப்பாக கொள்வனவுகள் , எரிபொருள் விற்பனை என்பவற்றில் ஊழல் புரிந்துள்ளார். அதை உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியும், எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர். (ஒ-456)

# தடுப்பூசி பெறாதோருக்கு பொது இடங்களில் தடை!



**கொழும்பு,ஒக்.28**
**கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், பொது இடங்களுக்குச் செல்வதைத் தடை செய்யும் வாய்ப்பு உள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தடுப்பூசி தன்னார்வத் தடுப்பூசி என்பதால் அதனை ஏற்றுக்கொள்ளுமாறு அரசால் வற்புறுத்த முடியாது. ஜனநாயக அரசு என்ற வகையில் பெரும்பான்மையினரின் பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அதற்காகத் தடுப்பூசி செலுத்தாதவர்கள் பொது இடங்களுக்கு நுழையத் தடைவிதிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.
ஒரு தனிநபருக்குத் தனது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள உரிமை உள்ளதைப் போன்று, மற்றவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த அவருக்கு உரிமை இல்லை.
ஐரோப்பா முழுவதும் பொது இடங்களில் இத்தகைய சட்டம் நடைமுறையில் உள்ளது. பொது இடங்களுக்கு சில வைரஸ்கள் வருவதை அறிந்த ஒரு பொறுப்பான அரசு என்ற வகையில், அந்த நபரையும் அவ்வாறான பொறுப்பிலிருந்து விடுவிக்க முடியாது.
பெரும்பான்மையினரின் நலனுக்காக இவ்வாறான தீர்மானத்தை எடுக்கமுடியும்- என்றார். (ஒ-4)



# காணிகளை விடுவிக்க அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஒக்.28
கிளிநொச்சி மாவட்டத்தில் வன வளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பிலான கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
மாவட்ட மேலதிகசெயலர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், ஆனைவிழுந்தான் பகுதியில் வன வளத் திணைக்களத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பு மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேசங்களில் வனவளத் திணைக்களத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.
இதில் வனவளத் திணைக்களத்தின் ஆலோசகர் உள்ளடங்கிய உயர்அதிகாரிகள், கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்கள், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (ஒ-46)

## இடைத்தரகர்களால்

# மணல் அள்ளப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 28
அடுத்த வருடம் முதல் கட்டுமானப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் கீழ் நாடுமுழுவதும் மணல் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இடைத்தரகர்களால் மணல் அள்ளப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கம் என சுற்றுச்சூழல் அமைச்சு அறிவித்துள்ளது.
மணல் விநியோகத்தை முறைப்படுத்துவதற்காக மணல் விநியோக உரிமையாளர்கள் மற்றும் டிப்பர் வாகன சாரதிகளுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பொருள்கள் கூட்டுத்தாபனத்தின்கீழ் மணல் விநியோகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.
தற்போது மன்னம்பிட்டி மணலுக்கு சந்தையில் அதிக தேவை உள்ளது. எனினும் சில இடைத்தரகர்கள் மன்னம்பிட்டி மணலுடன் ஏனைய மணலைக் கலந்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். இந்த இடைத்தரகர்களின் சுரண்டலால் மன்னம்பிட்டியில் இருந்து 4 ஆயிரத்து 830 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு கனசதுர மணலின் விலை 6 ஆயிரத்து 550 ரூபாவாக உயர்ந்துள்ளதாகவும் சுற்றாடல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## ஈஸ்டர் தாக்குதல்

# பூஜித், ஹேமசிறிக்கு எதிரான வழக்குகள் கைவிடப்பட்டன

கொழும்பு, ஒக். 28
ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கைக் கைவிடுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சந்தேகநபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் விசேட நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர். அதற்கமைய, கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டுவந்த குறித்த வழக்கை கைவிடுமாறு பதில் நீதிவான் சஞ்சய கமகே உத்தரவிட்டுள்ளார். (ம)

# 60 வீதமானவர்களுக்கு போசாக்கு உணவில்லை

## யாழ்ப்பாணமும் உள்ளடக்கம்

கொழும்பு,ஒக்.28
இலங்கையில் சுமார் 60 வீதமானவர்களுக்கு போசாக்கான உணவுகள் கிடைப்பதில்லை. தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடக்கம் என்று உணவு உரிமை தொடர்பில் கண்காணிக்கும் தேசிய நிறுவனம் தெரிவித்துள்ளது. கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
கொரோனாத் தொற்றுப் பரவுதலின் பின்னர் போசாக்கான உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம், கம்பஹா, களுத்துறை, காலி, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய 10 மாவட்டங்களில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.
கருத்துக் கணிப்பில் பங்குபற்றியவர்களில் 71 வீதமானோர் குறைந்த விலையில் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். 69 வீதமானவர்கள் வாரமொன்றில் ஐந்து நேரங்கள் உணவு உட்கொள்ளவில்லை. அதேவேளை 14 வீதமானவர்கள் வாரமொன்றில் ஒன்று அல்லது இரண்டு நாள்கள் ஒருவேளை உணவையேனும் பெற்றுக்கொண்டதில்லை- என்றுள்ளது. (ஒ-4)

# அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளாந்தம் அதிகரிப்பு

## நுகர்வோர் திண்டாட்டம்

கொழும்பு,ஒக்.28
அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கு நாளாந்தம் அதிகரித்து வருகின்றது என்று நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.
சதொச விற்பனை நிலையங்கள் மூலம் அரிசி மற்றும் சீனியை சலுகை விலையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபோதும், சில சதொச விற்பனை நிலையங்களில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.
அத்தியாவசியப் பொருள்களின் திடீர் விலையேற்றம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றது. கட்டுப்பாட்டு விலையை அரசு நீக்கியமையால் பொருள்களின் விலையை வியாபாரிகளே நிர்ணயித்துள்ளனர் என்று நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-4)

# இலங்கைக்கு வருகின்றார் ஐ.நாவின் அறிக்கையாளர்



**கொழும்பு, ஒக். 28**
**அடிமைத்துவத்தின் சமகால போக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடா இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.**

இலங்கை பற்றிய அறிக்கையிடலுக்காக நவம்பர் மாத இறுதியில் அவர் வருகை தரவுள்ளார். இவர், நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், மனித கடத்தல் மற்றும் நவீன முறையிலான அடிமைத்தனம் ஆகியன தொடர்பான அறிக்கையிடலில் நிபுணத்துவம் பெற்றவர். மனித கடத்தல் தொடர் பான வடக்கு அயர்லாந்து சட்ட சபை குழு, போதைப்பொருள் மற்றும் குற்றத்துக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு என்பனவற்றில் அவர் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# தனிப்பட்ட ரீதியில் நான் பொறுப்பேற்கமாட்டேன்!

## மைத்திரியும் விடாப்பிடி

கொழும்பு, ஒக். 28
ஈஸ்டர் தாக்குதலுக்கு அரசு என்ற ரீதியில் கூட்டுப் பொறுப்பேற்க நான் தயார். ஆனால், தனிப்பட்ட ரீதியில் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஈஸ்டர் தாக்குதலுக்கு அரசு என்ற ரீதியில் கூட்டுப் பொறுப்பேற்க நான் தயார். ஆனால், தனிப்பட்ட ரீதியில் நான் பொறுப்பேற்க மாட்டேன். தாக்குதல் நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து, நாட்டைவிட்டுத் தப்பியோடும் அளவுக்கு நான் பலவீனமானவன் அல்லன்.

இரசாயன உரத்துக்குத் தடைவிதித்து சேதனப் பசளைத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது பெரும் பிரச்சினையை தோற்றுவிக்கும் என்பதனால் அந்தத் திட்டத்தை கட்டம் கட்டமாகச் செயற்படுத்த வேண்டும் என்று நான் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். ஆனால், அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை - என்றார். (ம)

### கிளைமத்தோன் சர்வதேச நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 28
காலநிலை மாற்றம் தொடர்பில் இளையோர் ஒன்றிணையும் கிளைமத்தோன் 2021க்கான சர்வதேச நிகழ்வு, யாழ்ப்பாண நகரத்தில் மூன்றாவது வருடமாக நடைபெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை இது ஆரம்பமாகி தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது.
யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இதனை தெரிவித்தனர்.
இந்தமுறையும் கொரோனாப் பரவல் காரணமாக முற்று முழுதாக இணையவளியூடாகவே நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.
காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ள 150க்கும் மேற்பட்ட பெருநகரங்களில் இளையோர்கள் ஒரே காலப்பகுதியில் ஒன்றிணையும் பெருநிகழ்வாக கிளைமத்தோன் நடைபெற்று வருகின்றது.
இது பற்றிய மேலதிக விவரங்களை அறியவும் இணைந்து செயற்படவும் Climathonjaffna@gmail.com உடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (கு-20)

# 3,300 சீனர்களுக்கு 3ஆவது டோஸ்

கொழும்பு,ஒக்.28
இலங்கையில் சீனப்பிரஜைகள் 3 ஆயிரத்து 300 பேருக்கு தற்போது வரை சினோபார்ம் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.
கடந்த 22 ஆம் திகதி முதல் சீன நாட்டவர்களுக்கு மூன்றாவது டோஸ் செலுத்தப்பட்டு வருகின்றது.
கொழும்பு, கண்டி, அம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் தம்புள்ள ஆகிய பகுதிகளில் சேவையாற்றும் சீனர்களுக்கே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு நாம் தயார்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28
உள்ளூராட்சிசபைத் தேர்தலை எந்தநேரத்திலும் நடத்துவதற்கு தயாராக உள்ளோம் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
உள்ளூராட்சிசபைத் தேர்தலை எந்த நேரத்திலும் நடத்துவதற்கு தயாராக உள்ளோம். தொற்றுநோய்க்கு மத்தியில் எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படுமானால், சில



கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
தொற்றுநோய் நிலைமையைக் கருத்திற் கொண்டு திகதிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும். உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை ஓராண்டு வரை நீடிக்கும் அதிகாரம் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு உண்டு. அதைத் தடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இல்லை - என்றார். (ம)




கிட்டடியில வயலுக்க இறங்கி, விவசாயியாய் மாறி படம் காட்டின சட்டாம்பியார் அதே சூட்டோட சூடா, மீனவர்களுக்காக போராடுறன் எண்ட பேரில, நாலைஞ்சு பேரோட படகுச்சவாரி போனவரெல்லோ. அந்தப் படகுச் சவாரிப் போராட்டத்தால நிறையக் குழப்பங்கள். ஒண்டு, ஆருக்காக போராடுறன் எண்டு சொன்னாரோ அவைக்கு அறிவிச்சு, அவையின்ர கருத்தைக்கேட்டு அந்த மீனவர்களின்ர ஆதரவோட இந்தப் படகோட்டப் போராட்டம் நடக்கேலை. அதோட இந்திய மீனவர், குருநகர் மீனவர் எண்டு எல்லாருக்கும் இடையில கொளுத்திப் போட்டதும், போராட்டம் எண்ட பேரில படகில ஏறி ஒரு 'ட்ரிப்' அடிச்சதும் தான் அந்தாளின்ர போராட்டத்தின்ர பலன். கூடவே "அமைச்சருக்கு ஐயாயிரம் லஞ்சம் குடுத்துத்தான் குருநகர்காரர் சட்ட விரோத மீன்பிடி செய்யினம்" எண்டும் உளற, அது அவருக்கே ஆப்பா போட்டுது.

மீனவர் இதை லேசில விடுறதா இல்லை. ஆளுக்கொரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டு முந்தநாள் சட்டாம்பியாரின்ர கொடும்பாவிய எரிக்கிற போராட்டம் நடத்தினவை. இன்னும் வேற வழியளிலயும் அவை போராடப் போறதா தகவல். இப்ப விசயம் அதில்லை. அண்டைக்கு கொடும்பாவி எரிச்ச போராட்டத்தில கலந்து கொள்ளச் சொல்லி , கூட்டமைப்புக்காரர் சிலரிட்டையும் போன் பண்ணிக் கேட்டிருக்கினம். ஆனா அவைக்கு ரண்டுங் கெட்டான் நிலைமை. போராட்டத்துக்கு போனால் சட்டாம்பியார் கோபிப்பார். போகாட்டி மீனவர்களின்ர எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும். அதால, வருத்தம், கொழும்பு போகப் போறன் எண்டு ஆளுக்கு ஒவ்வொரு சாட்டுச் சொல்லி நழுவியிருக்கினம்.
இப்ப லேட்டஸ்ட்டா சட்டாம்பியாரோட சண்டித்தனத்துக்கு நிக்கிற கூட்டமைப்பு எம்.பிக்கும் மீனவர்கள் வரச் சொல்லி அழைப்பு விட்டிருக்கினம். அந்தாளுக்கும் அதே தர்மசங்கடம். என்னதான் சண்டித்தனத்துக்கு நிண்டாலும், சட்டாம்பி கறுவியம் வைச்சால் அவ்வளவுதான் . தன்ர 'தமிழரசுத் தலைவர்'எண்ட கனவுக்கே சட்டாம்பி வேட்டு வைச்சிடும் எண்டது இந்த எம்.பிக்கு தெரியும் . ஏதேதோ சாட்டுச் சொல்லிப் பார்த்திருக்கிறார். ஆனால் மீனவர்கள் விடுறதாயில்லை.
"நீங்களும் அந்தப் படகுச் சவாரிக்கு போனனியள். அப்ப நீங்களும் எங்களுக்கு எதிர் தானே. அதுதான் வரமாட்டன் எண்டுறியள்" எண்டு மீனவர்கள் நேரடியாச் சொல்ல, இந்த எம்.பிக்கு 'ஏனடா அந்தச் சாவரிக்கு போனம்?' எண்ட மாதிரிப் போட்டுதாம். பிறகு அவர் நேரடியா விசயத்தைச் சொல்லியிருக்கிறார். "என்னதான் இருந்தாலும் அவரும் நானும் ஒரே கட்சி. உங்கட போராட்டத்துக்கு நான் ஆதரவு. ஆனால் வந்தால் கட்சிக்குள்ள பிரச்சினை ஆகிடும்" எண்டு உண்மையை அவர் உடைக்க, மீனவர்களுக்கு ஒரே கொதிப்பாம். "அப்ப உங்களுக்கும் ஒரு கொடும்பாவியை எரிக்க வேண்டியதுதான்" எண்டும் அவை சொல்லியிருக்கினம்.
அதுக்கு, "எனக்கு எத்தினை கொடும்பாவியும் எரியுங்கோ. ஆனால் சிக்கலுக்க மாட்டமாட்டன்" எண்டு ஆளைவிட்டால் காணும் எண்டு அந்த எம்.பி 'எஸ்கேப்' ஆகிட்டாராம்.
என்னதான் பெரிய பனங்காட்டு நரியா இருந்தாலும் சட்டாம்பி எண்டவுடன சலசலக்கதான் செய்யினம்.
ஆனா அந்தளவுக்கு சட்டாம்பியார்
அதிகாரமுள்ள ஆளுமில்லை.
எல்லாம் காலத்தின்ர கோலம்.



- பட்சி

# சுகாதார வழிகாட்டல்களை மீறினால் பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு,ஒக்.28**

**இலங்கை கொரோனாத் தொற்றிலிருந்து இன்னும் விடுபடவில்லை. மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறினால், ஏற்படும் பின்விளைவுகளை எதிர்வரும் நாள்களில் அனுபவிக்க நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளரான மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவிக்கையில்,

கடந்த ஏப்ரல் மாதத்தில் 200 தொற்றாளர்கள் பதிவாகினர். இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

தடுப்பூசிகள் மூலம் உருவாக்கப்படும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து வருகின்றது.

குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு நிலைமையை எதிர்கொள்ள பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

சுகாதார வழிகாட்டல்களை பொதுமக்கள் குறைந்தது இன்னும் ஒரு வருடமாவது கடைப்பிடிக்க வேண்டும்.

தடுப்பூசியைத் தொடர்ந்து சில நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கலாம்.

இருப்பினும் சுகாதார வழிகாட்டல்களைப் புறக்கணித்தால் சிக்கல்கள் ஏற்படும் -என்றார். (ஒ-4)



## குண்டு மீட்பு

கிளிநொச்சி,ஒக்.28

தனியார் காணியில் மண்ணில் புதையுண்ட நிலையில் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வாநகர் பகுதியில் இருந்தே நேற்றுமுன்தினம் குறித்த குண்டு மீட்கப் பட்டது.

பயிர்ச்செய்கைக்காக நிலத்தை பண்படுத்தும்போது மண்ணுக்குள் குண்டு புதைந்த நிலையில் காணப்பட்டது.

இதனையடுத்து காணி உரிமையாளரால் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் குண்டை மீட்டு, செயலிழக்கச்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஜ-113)

## வவுனியாவில் அதிக மழை

வவுனியாவில் இந்தவருடம் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பாளர் தா.சதானந்தன் தெரிவித்துள்ளார் .

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிருந்து நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான நிறைவடைந்த காலப்பகுதியில் ஆயிரத்து 15.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்று மட்டும் 46.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது .

இடைக்கால பருவபெயர்ச்சி மழை தொடர்ந்து பெய்து வருவதால், இடி மின்னல் தாக்கம் தொடர்பில் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-4-110)

## நிலைமை மோசமடைந்தால் மீண்டும் கட்டுப்பாடுகள்

கொழும்பு,ஒக்.28

பொதுமக்களின் அலட்சியத்தால் கொரோனாத் தொற்று நிலைமை மோசமடைந்தால், மீண்டும் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகமான மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தடுப்பூசித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், பொதுமக்கள் பெருமளவில் சுகாதார வழிகாட்டல்களைப் புறக்கணிக்கின்றனர் என்று சுகாதாரப் பிரிவுகள் குற்றஞ்சுமத்தியுள்ளன. தற்போதைய நிலை தொடருமானால், மேலும் கட்டுப்பாடுகளை விதிக்க நேரிடும். மக்கள் சரியான முறையில் முகக்கவசங்களை அணிவது, ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பது அவசியம் -என்றார் (ஒ-4)



## குருதிக்கொடை முகாம்

மன்னார்,ஒக்.28

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு நேற்று நடைபெற்றது.

'உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்' எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் குருதிவங்கியின் உதவியுடன் குறித்த குருதிக்கொடை முகாம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயப் பணியாளர்கள், மருத்துவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் குருதிக்கொடையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-56)

## பொருள்களின் பற்றாக்குறைக்கு ஒரேதீர்வு உள்நாட்டு உற்பத்தியே!

### நாட்டுமக்கள் அந்தரித்துக்கொண்டிருக்க வர்த்தக அமைச்சரின் கருத்து இது

கொழும்பு, ஒக். 28

தற்போது ஏற்பட்டுள்ள பொருள்களின் பற்றாக் குறைக்கு ஒரே தீர்வு, உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை அதிகளவில் உற்பத்தி செய்வதே" என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலகில் அதிகளவில் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடு சீனா, ஆனால் அங்கு தற்போது வார நாள்களில் ஒருநாள் மட்டுமே வேலை நடைபெறுகிறது.

4 நாள்கள் உற்பத்தி இல்லை. எனவே உலகச்சந்தையில் எண்ணெய் விலை அசாதாரணமாக அதிகரிக்கும். நாம் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு அல்ல. உலக எரிவாயு விலையும் அதிகரித்துள்ளது. நாம் எரிவாயு உற்பத்தி செய்யும் நாடும் அல்ல. தற்போது உலகிலுள்ள அனைத்து உணவுப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன.

நாட்டில் பால்மா, பருப்பு போன்ற பொருள்களும் போதுமான அளவில் இல்லை. சிமெந்தில் ஒரேயொரு தயாரிப்பு மட்டுமே இலங்கையில் இடம்பெறுகிறது.

- என்றார். (து-இ)

## ஓமந்தையில் துப்பாக்கி மீட்பு

வவுனியா, ஒக்.28

வவுனியா- ஓமந்தைப் பகுதியில் இருந்து கட்டுத்துப்பாக்கி ஒன்றை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் ஆயுதம் இருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் கட்டுத்துப்பாக்கி மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-110)

## பெற்றோரை இணைத்து

# பாடசாலைகளின் முன் 3ஆம் திகதி போராட்டம்

## ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 28

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் போராட்டத்தின் ஓர் அங்கமாக எதிர்வரும் 3ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளின் முன்பாகவும் பெற்றோரை இணைத்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்த எதிர்பார்த்துள்ளோம் என்று ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பளப் பிரச்சினைக்கான தீர்வைக் கோரி முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் இரண்டாம் பாகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். அந்த வகையில் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கை தொடரும்.

8 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகளுக்கு முன்பாக பெற்றோரை இணைத்து ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். இந்த நடவடிக்கையில் கலந்துகொள்ளுமாறு பெற்றோருக்கு அழைப்பு விடுக்கிறோம் -என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-இ)

## குடியிருப்புக்குள் புகுந்தது முதலை

கிளிநொச்சி பாரதிபுரத்தில் உள்ள குடியிருப்புக் காணிக்குள் நேற்று அதிகாலை நுழைந்த முதலை பாதுகாப்பாகப் பிடிக்கப்பட்டதுடன் குடியிருப்பாளர்களால், படையினருக்கும் தகவல் வழங்கினார்.

முதலை பாதுகாப்பாக கொண்டுசெல்லப்பட்டு, மக்கள் நடமாட்டமற்ற முறிகண்டி குளத்தை அண்மித்து விடுவிக்கப்பட்டது. (ஒ-46)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யதார்த்தம் அறிக!


உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. முன்னைய காலங்களில் தினசரி **350** மாணவர்கள் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல விண்ணப்பித்திருந்த நிலையில் தற்போது அந்தத் தொகையானது தினசரி ஆயிரத்தைத் தாண்டி நிற்கின்றது.

இந்தத் தரவுகள் எதைச் சுட்டி நிற்கின்றன? இலங்கை இளைஞர்கள் பலரும் உயர்கல்வியைப் பெறுவதற்கு ஆர்வம் காட்டுகின்றனர் என்பதையா? இருக்கலாம். இல்லாமலில்லை. ஆனால், அதைவிட முக்கிய காரணம், இந்த நாட்டில் இருந்து எப்படியாவது தப்பித்து ஓடினால்போதும் என்று அவர்களிடையே எழுந்துள்ள மனநிலையே 'உயர்கல்வி' என்ற போர்வையில் இளைஞர்கள் வெளிநாடுகளை நோக்கிப் படையெடுக்கக் காரணம் என்று சொன்னால் அதை இந்த அரசால் மறுக்க முடியுமா? உயர்கல்விக்காக மட்டுமே இளைஞர்கள் வெளிநாடு சென்றாலன்றி மற்றும்படி உண்மையில் இதுவொரு வருந்தத்தக்க தகவல்.

இந்த நாட்டில், அதன் நிர்வாகத்தில் எவ்வளவு தூரம் நம்பிக்கை இழந்திருப்பதால்தான் இளைஞர்கள் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்திருப்பார்கள் என்பதை ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும். இங்கு தமக்கு எதிர்காலம் இல்லை என்ற அவர்களின் எண்ணம்தான் கடல்கடந்து அவர்கள் பயணப்பட காரணமாகின்றது என்பதை முதலில் ஆட்சியாளர்கள் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த 'ஏற்றுக்கொள்ளும்' மனப்பான்மை இருந்தாலேயே இந்தப் பத்தியின் அர்த்தம் அவர்களுக்குப் புரியக்கிட்டும். மாறாக, வழக்கம்போன்று தமது இயலாமைக்கு முட்டுக்கொடுத்து, உயர்கல்வியைப் பெறுவதில் இளைஞர்களுக்கு இருந்த ஆர்வம் மட்டும்தான் அவர்கள் வெளிநாடுகளை நோக்கிச் செல்லக் காரணமாகின்றது என்று அரச தரப்பினர் சாட்சி சொல்வார்களானால் மீட்சி என்பது கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் இல்லை.

நாளாந்தப் பயன்பாட்டுக்கு உரித்தான அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கண்ணெதிரே அதிகரித்துச் செல்கின்றன. கடந்த வாரம் இருந்த விலைகள் இந்த வாரம் இல்லை. அடுத்த வாரம் எதன் விலை எவ்வாறு உயருமோ என்பது பீதி நிலை. பணவீக்கம் ஆபிரிக்க நாடுகளுக்குச் சவால் விடும் வகையில் உள்ளது, உரம் இல்லாமல் விளைச்சல் பாதிக்கப்பட்டால் உணவுப் பற்றாக்குறையும் தாண்டவமாடுவதற்கு வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. வேலையின்மை, ஊதியக் குறைப்பு, வருவாய் இழப்பு என்பனவீட்டுக்குவீடு வாசல்படியாக மாறிவிட்டன. இவ்வாறிருக்கையில் எவ்வாறு இளைஞர்கள் இந்தத் தீவுக்குள் தமது எதிர்காலத்தைத் தேடிக்கொண்டிருப்பார்கள்.

இந்த நாடு இன்று கடனால் சூழப்பட்டிருக்கலாம், பணவீக்கம் ஏற்பட்டிருக்கலாம், தேசிய உற்பத்திகளில் வீழ்ச்சிநிலை கண்டிருக்கலாம். ஆனால், இவற்றிலிருந்து நாட்டை மீட்கும்போரில் முதன் நிலைப் போராளிகள் இளைஞர்கள்தான். சிப்பாய்கள் இல்லாமல் எந்தப் போரும் முன்னெடுக்கப்பட்டதாக வரலாறு இல்லை. அவர்களின் மனோநிலையையும் நாட்டின் மீதான பற்றையும் சிதைத்துவிடாதீர்கள். பின்பு மீட்சி என்பது இல்லாமலேயே போய்விடலாம்.




# மூன்றாம் தரப்பிடம் செல்லக் கூடாது

## அரசைக் கோருகின்றது எதிர்க்கட்சி

**கொழும்பு, ஒக். 28**

**தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தால் நிராகரிக்கப்பட்ட உரமாதிரிகளை, மூன்றாம் தரப்புக்கு வழங்கி ஆய்வுக்குட்படுத்துவதற்கான அதிகாரம் அரசுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட சீன நிறுவனத்துக்கோ கிடையாது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே எதிரணி பிரதம கொறடாவான லக் ஷ்மன் கிரியல்ல இந்த விடயத்தை சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீன நிறுவனமொன்றிடமிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சேதனப்பசளையில் தீங்கு விளைவிக்கும் பக்ரீறியாக்கள் இருப்பதாக தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையம் அறிவித்தது. ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் ஆய்வு செய்து, இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனவே, தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையை ஏற்க வேண்டும். அதனை நிராகரிக்க முடியாது. நிலைமை இவ்வாறிருக்கையில் எச்சரிக்கை விடுக்கும் வகையில் சீனநிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

சீனநிறுவனம் வேண்டுமானால் இந்த விடயம் தொடர்பில் தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தில் மேன் முறையீடு செய்யலாம். மாறாக மூன்றாம் தரப்பை நாடமுடியாது. மூன்றாம் தரப்பிடம் மாதிரிகளை வழங்கி ஆய்வு செய்யும் அதிகாரம் எமது அரசுக்கும் கிடையாது. அவ்வாறு மூன்றாம் தரப்பை நாடுவதாக இருந்தால் அதற்கு தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப்படுத்தும் சேவை நிலையத்தின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

எமது ஆட்சியில் நாம் தூதரகங்களுக்கு செல்லவில்லை. மாறாக தூதுவர்களை அமைச்சுக்கு அழைத்தே பேச்சுகளை நடத்தினோம். ஆனால், இன்று அமைச்சர்களும், அதிகாரிகளும் தூதுரகங்களுக்குச் சென்று பேச்சு நடத்துகின்றனர். உர விவகாரம் என்பது இராஜதந்திர நடவடிக்கை அல்ல. அதனை இராஜதந்திர நடவடிக்கையாக காண்பிப்பதற்கு அரசே முற்படுகின்றது. சீனாவில் உள்ள நிறுவனமொன்றிடம் இருந்தே உரம் பெறப்பட்டுள்ளது - என்றார். (ஒ-44)

# மருத்துவப் பட்டப்படிப்பு: வயதெல்லை திருத்தம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்மொழிவு

கொழும்பு,ஒக்.28

மருத்துவ மற்றும் இளங்கலை பட்டப்படிப்புகளின் வயதை மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத்தில் முதுகலைப் பட்டப்படிப்பை நிறுவுவதற்கான முன்மொழிவுக்கு, கல்வி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு அதிகாரிகள் மற்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியை நிறைவு செய்யும் வயதை மேம்படுத்துவதற்கான யோசனை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால், கல்வி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை ஓகஸ்ட் மாதம் நடத்துதல், க.பொ.த உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் மாதம் நடத்துதல், பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களை நீக்குதல் மற்றும் 18 வயதுக்குள் பல்கலைக்கழக அனுமதி வழங்குதல் போன்ற பல முன்மொழிவுகளும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதற்கமைவாக முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தவும், அதனை நடைமுறைப்படுத்துவதை தீர்மானிப்பதற்கு நிபுணர் குழுவை அமைக்கவும் கல்வியமைச்சர் ஒப்புக்கொண்டார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

# இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களையே ஆராய்ந்தேன்

## இந்திய வர்த்தகர் அதானி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.28**

**இலங்கைக்கு நான் சென்றிருந்தபோது இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையே ஆராய்ந்தேன் என்று இந்தியாவின் கோடீஸ்வர வர்த்தகர் கௌதம் அதானி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில், கொழும்பு துறைமுக மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேலதிகமாக, அபிவிருத்தித் திட்டங்களிலும் கவனம் செலுத்தினேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் எடுத்துக்கொண்ட படங்களையும் அவர் தனது பதிவில் இணைத்துள்ளார்.

அதேவேளை அதானியின் இலங்கை விஜயத்தின் போது எரிசக்தித்துறையில் புதுப்பிக்கத்தக்கமுதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதானி மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்குச் சென்றுள்ளார்.



இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளைச் சந்தித்தும் கலந்துரையாடியுள்ளார். (ஒ-4)

## ரவி கருணாநாயக்கவின் மனு சட்டமா அதிபருக்கு நோட்டீஸ்

பிணை முறி ஏலத்தின் போது அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்திய விவகாரத்தில், தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரி, முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த நீதிப் பேராணை (ரிட்) மனு தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு சட்டமா அதிபருக்கு நோட்டீஸ் அனுப்பும்படி, மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியால் நடத்தப்பட்ட பிணை முறி ஏலத்தின்போது அரசுக்கு ஆயிரத்து 500 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்கு, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு கோரி ரவி கருணாநயக்க ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தமக்கு எதிராக குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளதாக சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளபோதும், அந்த ஆணைக்குழுவால் அத்தகைய பரிந்துரை எதுவும் செய்யப்படவில்லை என்று ரவி கருணாநாயக்க மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-4)

## ஆணொருவர் அடித்துக்கொலை

கொழும்பு, ஒக்.28

கொடூரமான முறையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

119 அவசர இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் களனி, வனவாசல, பொசன் வத்தை வீதியில் சடலம் மீட்கப்பட்டது. பேலியகொட, தலங்கனைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர். தகராறு காரணமாக அவர் கொல்லப்பட்டிருக்கலாம். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. வேறோர் இடத்தில் கொடூரமாக அடித்துக் கொலை செய்து, அதன்பின்னர் குறிப்பிட்ட பகுதிக்கு சடலத்தைக் கொண்டு வந்துள்ளனர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஒ-4)

கொரோனா

## தொற்றாளர் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடும்

### சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.28

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையையோ, இறப்புக்களின் எண்ணிக்கையையோ சரியாக மதிப்பிட்டுக் கூறமுடியாது. எமக்குத் தெரியாமலும் தொற்றாளர்கள் மறைந்திருக்கக் கூடும் இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றாளர்களின் அதிகரிப்பு காரணமாக இறப்புக்கள் அதிகரித்தனவா என்பதை ஆராய்ந்து வருகின்றோம். இறப்புக்களின் அதிகரிப்புத் தொடர்பில் திட்டவட்டமாக எதையும் கூற முடியாது. கொரோனா இறப்புக்களின் ஏற்ற இறக்கங்கள் சாதாரணமாக நிகழக்கூடும். இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்வது மிகவும் முக்கியமானது. தொற்றுநோயியல் பிரிவு, இறப்புக்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கையளிக்கும். நமக்கே தெரியாமல் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா என்பது சந்தேகமே. இந்த நிலை காரணமாக அனைவரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

-என்றார். (ஒ-4)

## ஷெர்மிளா ராஜபக்சவுக்கு மற்றொரு பதவி

கொழும்பு, ஒக்.28

தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகமாக ஷெர்மிளா ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் சமூக ஊடகப் பிரிவின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து இஷினி விக்கிரமசிங்க அண்மையில் இராஜினாமா செய்ததை அடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

## தாக்குதல் விவகாரம்; டி.ஐ.ஜி. இடமாற்றம்

சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி) ரன்மல் கொடித்துவக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளார்.

பொலிஸ் களப்படைத் தலைமையகத்தின் மருத்துவ வளங்கள் மற்றும் நலன்புரிபிரிவுக்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ரன்மல் கொடித்துவக்கு, நபரொருவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில், பொலிஸ்மா அதிபர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## மத்திய வங்கி ஆளுநர் அதிகாரத்தில் தரமுயர்வு

கொழும்பு, ஒக்.28

இலங்கையின் அதிகார முன்னுரிமைப் பட்டியலில், இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் பதவி 5 ஆவது இடத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், பிரதம நீதியரசர் முதல் நான்கு இடங்களிலும் எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சரவை அமைச்சர்கள், பீல்ட் மார்ஷல் ஆகியோர் ஐந்தாம் இடத்திலும் பட்டியலிடப்பட்டிருந்தனர். ஆளுநரும் ஐந்தாம் இடத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

இந்த முன்னுரிமைப் பட்டியல் அரச விழாக்களின் போது பயன்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை மத மற்றும் திருச்சபை முக்கியஸ்தர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படும். (ஒ-4)

## அசாத் சாலிக்கு மறியல் நீடிப்பு

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, எதிர்வரும் 9ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஊடக சந்திப்பொன்றில் சர்ச்சையான கருத்தொன்றை வெளியிட்டமை தொடர்பில் கடந்த மார்ச் மாதம், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அசாத் சாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-4)

## சாட்சிகள் இல்லாவிடில் எதுவும் செய்ய இயலாது



கொழும்பு, ஒக்.28

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் ஆணைக்குழுவில் அதற்கு தெளிவான சாட்சிகள் இருக்க வேண்டும்.

இவ்வாறு பற்றிக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவில் தெளிவான சாட்சி எதுவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இல்லை.

அவரவர் தேவைக்கேற்ப எவரையும் உள்ளே போட முடியாது. ஆனால், அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா? என்று ஆராயுமாறு ஆணைக்குழு அறிக்கையில் உள்ளது. அதனை சட்டமா அதிபர் திணைக்களம் தேடியறிய வேண்டும்.

அதைவிடுத்து பேராயரோ அல்லது வேறு எவரோ தீர்மானிக்க முடியாது. மௌலவிமார்களுடன் கலந்துரையாடி பிரியாணி உண்டவர்கள் தான் இந்த ஆணைக்குழுவில் உள்ளனர்.

எனவே, இந்த ஆணைக்குழுவின் தீர்மானங்கள் குறித்து எமக்குப் பிரச்சினை உள்ளது-

என்றார். (ஒ-4)

## சிறுவர்களிடையே தொற்றா நோய்கள்

கொழும்பு,ஒக்.28

சிறுவர்களிடையே தொற்றாநோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவிக்கையில்:

தற்போது ஆரம்பப்பாடசாலைகள், முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலைச் சிற்றுண்டிச்சாலை எவ்வாறு அமைய வேண்டும் என்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், பல சிற்றுண்டிச்சாலைகள் அந்தச் சுற்றறிக்கைக்கு அமையச் செயற்படுவதில்லை.

அதேவேளை, மாணவர்களின் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் உடற்பயிற்சி முறைமைகள் தொடர்பில் கல்வி அமைச்சுடன் தங்களது கருத்துகளைப் பரிமாறியுள்ளோம் - என்றார். (ஒ-4)

*தடைக்கு மத்தியிலும்*

## கொழும்பு துறைமுகத்தில் 400 வாகனங்கள் தேக்கம்

கொழும்பு,ஒக்.28

இலங்கையில் வாகனங்கள் இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள போதும், 400 வாகனங்கள் கொழும்பு துறைமுகத்தில் தரையிறங்கியுள்ளன.

குறித்த வாகனங்களை அரசுடைமையாக்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் தகவல் கோரி, இலங்கை சுங்கத் திணைக்களம் , நிதி அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அரசால் வாகனங்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது.

அதன் பின்னரும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால் அது சட்டத்தை மீறிச் செய்யப்பட்ட செயல் என்று சுங்கத் திணைக்களம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய துறைமுகத்தில் சொகுசு வாகனங்கள் 3000க்கும் அதிகளவில் உள்ளன. துறைமுகத்தில் உள்ள வாகனங்களில் அதிகமானவை அனுமதிப்பத்திரமுறையின் கீழ் ஜப்பான் மற்றும் பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று சுங்க ஊடகப்பிரிவு பேச்சாளர் சுதந்த டி சில்வா தெரிவித்துள்ளார். (ஒ-4)

## பூஸ்டர் டோஸ் ஏற்றல் நவம்பரில் ஆரம்பம்

கொழும்பு,ஒக்.28

கொரோனாத் தடுப்பூசியின் இரு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம்திகதி முதல் பூஸ்டர் டோஸ் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்களுக்கு பூஸ்டர் டோஸ்களை வழங்குவதற்காக இரண்டு மில்லியன் தடுப்பூசிகள் இருப்பில் உள்ளன.

பூஸ்டர் டோஸை வழங்குவதற்காக மேலும் 14.5 மில்லியன் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4)




## பயங்கரவாதத் தடைச்சட்டம் ஊடகங்களுக்கேற்ப சாய்கிறதா?

### ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் கேள்வி

கொழும்பு, ஒக். 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின்ஒளிப்படங்களை பயன்படுத்தும் தெற்கின் சிங்கள, ஆங்கில ஊடகங்கள்மீது எந்தக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படாத நிலையில், அத்தகைய ஒளிப்படங்களைப் பயன்படுத்தும் தமிழ் ஊடகங்கள், அதன் பணிப்பாளர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுகின்றமை எந்த வகையில் நியாயமானது? என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா கொழும்பு நீதிவான் நீதிமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இணைய ஊடகவியலாளர்கள் இருவர் மீதான வழக்கு விசாரணைக்கு வந்த போதே சட்டத்தரணி இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

வடக்கின் பத்திரிகை ஒன்றுக்கு எதிராக பிரபாகரனின் ஒளிப்படத்தை பயன்படுத்தியமைக்காக தண்டனை சட்டக் கோவையின் 120 ஆம் அத்தியாயத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. யாழ். நகர மேயருக்கு எதிராகவும் புலிகளின் காவல் துறையினரின் சீருடையை ஒத்த சீருடையை அறிமுகம் செய்தமை தொடர்பில் அதே சட்டப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்தது. இல்லாத புலிகளுக்கு எப்படி உதவ முடியும்?.

எனினும், அதனை ஒத்த குற்றச்சாட்டுக்களின்கீழ் கைது செய்யப்பட்ட வேறு பலருக்கு பிணையளிக்க முடி யாத பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சுமத்தி வெறுமனே தடுப்புக் காவலின் கீழ் வைத்திருப்பதை எப்படி நியாயப்படுத்துவது? என்று கேள்வியெழுப்பினார்.

இந்தநிலையில், முன் வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிமன்று, இந்த விவகாரத்தில் நவம்பர் 2 ஆம் திகதி உத்தரவு ஒன்றை பிறப்பிப்பதாகத் தெரிவித்து. (கு)

# 45ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் இராசேஸ்வரன் நவர்ணன் (சிந்து)

மலர்வு 05 . 10 . 1997

உதிர்வு 14 . 09 . 2021

நேற்று வரை எம்முடனே இருந்தாயடா
இன்று எம்மைத் தனியாக தவிக்க விட்டாய்
நெஞ்சகலாத் துயர் தந்து சென்றீரோ வானுலகு
நித்தம் உனையழைத்த வாயால் - எம்
நெஞ்சுருகி புலம்ப வைத்தாயடா
போய் வாறேன் என்றுதானே சொல்லிப் போனாய்
பாதகம் என்னதான் நேர்ந்ததுவோ
பாவிகளாய் நாமிருந்து பதறுவதை நீயறியாய்
மாதங்கள் கடந்தாலும் மாறுமோ எம்துயர்
ஈரவிழி நீர் சொரிய
இதயங்களால் பூசிக்கின்றோம்
உந்தனது ஆத்ம சாந்திக்காக ...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**குறிப்பு :**

இன்று (28.10.2021) வியாழக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீ கரண நிகழ்வில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

கோயிலாமனை,
கொடிகாமம்

குடும்பத்தினர்
077 670 1153




Power Steering தொழிநுட்பம், FDS தொழிநுட்பம்

Phone இல் விபரம் அறியலாம்

குதிரை வலு 85 இற்கும் அதிகம் கொண்ட டெர்போ என்ஜின் காரணமாக அதிக வினைத்திறன்மிக்க எரிபொருள் சிக்கனமான

விரிவான டிரக் தொகுதி மற்றும் நிலத்திலிருந்து உயரம் அதிகமென்பதால் எந்தவொரு சேற்றிலும் இறுகாமல் இலகுவாக கையாளக்கூடிய வசதி

விழுந்த நெற்கதிர்களை இலகுவாக பொறுக்கி எடுத்து வெட்டக்கூடிய வசதி

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஜியர் தொகுதி காரணமாக வேகத்தில் அறுவடை செய்யக்கூடிய திறன்

அதிக கொள்ளளவு கொண்ட தானிய தொட்டி

விற்பனையின் பின்னரான விசேட சேவை

சிறப்பான ஜப்பான் தொழிநுட்பம் மற்றும் தனித்தன்மை வாய்ந்த யன்மார் உத்தரவாதம்

அசல் யன்மார் உதிரிப்பாகங்கள்

**விலை ரூபா 7,999,000 இலிருந்து** நிபந்தனைகளுக்குட்பட்டது.

0761 831 343 - சிந்துஜன் | 0772 842 433 - நிஷாகரன் | 0773 457 988 - துஷான்

Browns Agriculture

# இந்தியாவில் வேகமாக பரவும் புதிய உருமாற்றக் கொரோனா

புதுடில்லி, ஒக்.28

இந்தியாவில் கொரோனாவின் 2ஆம் அலை குறைந்து வரும் நிலையில் டெல்டாவின் 'ஏஒய்.4' எனும் புதிய உருமாறிய வைரஸ் மத்திய பிரதேசத்தில் 6 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது என தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

எந்த அறிகுறியும் இல்லாத 41 வயது முதல் 80 வயது கொண்ட 6 பேரின் மாதிரிகள் கடந்த செப்ரெம்பர் மாதம் டெல்லியில் உள்ள தேசிய தொற்றுநோய் கட்டுப்பாட்டு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தப் பரிசோதனை முடிவுகள் கடந்தவாரம் வெளியாகின.

இதில் ஆறு பேருக்கு டெல்டா வகை வைரஸின் உருமாறிய தொற்றான ஏஒய்.4 பாதித்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் 'ஏஒய்.4' வைரஸ், டெல்டாவை விட அதிகமாக பரவக் கூடியது எனவும், இது மிகவும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியதாகவோ அல்லது தடுப்பூசிகள் பயனற்றதாக இருந்ததாகவோ எந்த ஆதாரமும் இல்லை எனக் கூறியுள்ளது. (ச)

# பேரறிவாளனுக்கு பிணை நீடிப்பு

புதுடில்லி, ஒக்.28

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையிலிருந்த பேரறிவாளனுக்கு மீண்டும் ஒரு மாத காலம் பிணையை நீடித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் சிறுநீரகக் கோளாறு காரணமாகச் சிகிச்சை பெற்று வருகிறார். அதன் காரணமாக பிணை விடுப்பு வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தார்.

அதன்படி கடந்த 150 நாள்கள் சிறையிலிருந்து வெளியில் இருந்த பேரறிவாளனின் பிணைக் காலம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில் மேலும் ஒரு மாதம் பிணை நீடிக்கப்பட்டுள்ளது. (ச)

# 'பெகாசஸ்' ஒட்டுக் கேட்பு: நிபுணர்குழு அமைப்பு

புதுடில்லி, ஒக்.28

அரசியல் கட்சி பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் என பலரது தொலைபேசி உரையாடல்களை 'பெகாசஸ்' என்னும் செயலி மூலம் மத்திய அரசு ஒட்டுக் கேட்டது என்ற சர்ச்சை சில மாதங்களுக்கு முன்பு பூதாகரமாக வெடித்தது. பெகாசஸ் உளவு விவகாரத்தில் சுதந்திரமான விசாரணைக்கு உத்தரவிடக்கோரி பத்திரிகையாளர் சிலரால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணை கடந்த 13ஆம் திகதி முடிவடைந்தது. அதன் தீர்ப்பு நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி பெகாசஸ் ஒட்டுக்கேட்பு விவகாரம் குறித்து விசாரணை நடத்த முன்னாள் நீதிபதி ஆர்.வி. ரவீந்திரன் தலைமையில் 3 பேர் கொண்ட நிபுணர் குழுவை அமைக்க உத்தரவிட்டது.

மேலும், இந்தக்குழு 8 வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், நிபுணர் குழு உச்சநீதிமன்றம் மேற்பார்வையில் இயங்கும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச)

# 'ஐபோனு'க்கு பதில் 'விம் சோப்' டெலிவரி

## கேரளாவில் சம்பவம்



கேரளா, ஒக்.28

கேரளாவிலுள்ள கொச்சிப் பகுதியில் ஐபோன் ஓடர் செய்த நபருக்கு தொலைபேசிக்குப் பதிலாக விம் சோப் வழங்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 12ஆம் திகதி அமேசானில் அப்பிள் ஐபோன் பதிவு செய்துள்ளார்.

அந்தப் பொருள் மூன்று நாள்கள் கழித்து வழங்கப்பட்டது. அதனை வெளியில் எடுத்துப் பார்த்தபோது ஐபோனுக்கு பதிலாக ஒரு விம் சோப்பும் அதனுடன் 5 ரூபா நாணயமும் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இதையடுத்து குறித்த நபர் இதனைக் காணொலியாக எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். (ச)

# குழந்தைகளுக்கும் தலைக்கவசம்

புதுடில்லி, ஒக்.28

மோட்டார் சைக்கிளில் குழந்தைகளை அழைத்துச்செல்ல புதிய பாதுகாப்பு வரைவு விதிமுறைகளை இந்திய ... சாலைப் போக்குவரத்து, நெடுஞ்... துறை அமைச்சகம் வெளியிட்டு...

இந்த விதிகளின்படி, மோட்டா... ளில் 4 வயதுக்குக் குறைவான ... களை ... பயணிக்கும் ... கி.மீ க்கும் அதிக வேகத்தில் வாகன... செலுத்தக்கூடாது. மேலும் 9 மாதங்... முதல் 4 வயது வரையிலான குழந்... களும் தலைக்கவசம் அணிவது கட்டா... மாக்கப்பட்டுள்ளது. (ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 24 . 02 . 1943 |  | 28 . 09 . 2021 |

கடந்த 28.09.2021 அன்று இறைபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் சுப்பிரமணியம் பாலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (26.10.2021) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் வெளிநாடுகளிலும், உள்ளூரிலும் இருந்து தொலைபேசி மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள், சமூக வலைத்தளங்கள் மூலமாக இரங்கல் தெரிவித்தோருக்கும், அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.
077 358 3746

பா.பாலசுப்பிரமணியம் - மகன்
பா.வனஜா - மருமகள்
பா.சகானா, பா.அபிநயன், பா.கோபிகன் } பேரப்பிள்ளைகள்

(cs 17763) 2.6)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 . 08 . 1965 |  | 26 . 10 . 2021 |

## சிவலோகநாதன் யோகேஸ்வரி (புனிதா)

வெளிக்கண்டல் சந்தி கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் யோகேஸ்வரி (புனிதா) நேற்றுமுன்தினம் (26.10.2021) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் வல்லி நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவலோகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகராஜா (யோகன் - சுழிபுரம்), உதயகுமார் (உதயன் - வெளிக்கண்டல்) காலஞ்சென்ற உதயகுமாரி (வனிதா), சந்திரகுமார் (சந்திரன் - கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காந்தரூபன் (கண்ணன் - லண்டன்) சுபாசினி (சுமதி - லண்டன்), சுலக்சனா (குட்டி - வவுனியா), தரணிதரன் (தரணி - வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்ரனிராஜ் (சுதா - லண்டன்) சியாழினி (சானி - லண்டன்) அரவிந்தன் (அக்சவி - Enginnering - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திராதேவி (வட்டக்கச்சி), ஞான்ம்மா (திருகோணமலை), மகேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் சம்மந்தியும் டிருசன் (டிரு - லண்டன்), திவாயினி (திவா - லண்டன்), டினுயா (டினு - லண்டன்) அக்சவி (வவுனியா - இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் ) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்டாவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

சிவலோகநாதன்.(கணவர் - வெளிக்கண்டல் - 077 774 9972)
காந்தரூபன் (மகன் - காந்தன் - லண்டன் - +447 446 105 144)
அரவிந்தன் (மருமகன் - அக்சவி Enginnering - வவுனியா -0778677814)
அன்ரனிராஜ் (மருமகன் - சுதா - லண்டன் - +447 400 292 512)
உதயகுமார் (உதயன் - வெளிக்கண்டல் - 077 073 4984)

(cs.00910) (2.6)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25.05.1936

இறப்பு
06.11.2012

## அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்

ஓய்வு நிலை அதிபர்,
அகில இலங்கை சமாதான
நீதவான் (J.P)

திதி : அபரபக்க அட்டமி (28.10.2021)

வருடங்கள் 9 கடந்தது விடினும் என்றும் எம் மனங்களை விட்டு
பிரியாமல் எமது நினைவில் வாழும் பாசமான அப்பா!
இனிப்பாக பேசி துடிப்பாக திரிந்த தூயவனே!
உன் புன்சிரிப்புடன் கூடிய இன்முகம்
இன்னும் எங்கள் முன் நிழலாடுகின்றன.
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும் ஒவ்வொரு
கணமும் உன் நினைவுகள் எங்களுடனே எங்கள் இறுதிவரை தொடரும்..

(CS 17764) (3.6)

'சண்முகதீபம்'
இல.43/4 கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
18.01.1967

இறப்பு
08.11.2021

யாழ். அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Bern, கொக்குவில் கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லத்துரை கலாமோகன்

(Dipl. Masch.lng,FH - Swiss)

அமைதியின் உருவாமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே!!
மண்ணோடு உங்கள்
பூவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
பூத்த உந்தன் கொடிகள்
தவிக்குதய்யா!!
பூக்காதோ மீண்டும் உங்கள்
வாழ்வு என்று - பூவை நான்
புலம்பி தாங்கமுடியா துயரில்
தவிக்கின்றேன்........
ஆண்டவா ஏன்தான் பறித்தாயோ !!
தங்கள் ஆன்மா இறைபதம் சேர
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மனைவி - கலாமோகன் செல்வகுமாரி
மாமி - செ.ஞானாம்பிகை
மகள் - கலாமோகன் பவித்ரா
மகன்கள் - கலாமோகன் அனுருதிரன், அபிரதன்.

(cs.40769) (2.6)

### பிடிவாதத்தைக் கைவிட்டு

# விவசாயிகளின் கோரிக்கையை அரசு செவிமடுக்க வேண்டும்

## வினோ எம்.பி. தெரிவிப்பு



**மன்னார், ஒக்.28**

**அரசு தனது பிடிவாதத்தைக் கைவிட்டு விவசாயிகளின் கோரிக்கையை செவிமடுக்கவேண்டும் -என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி வேண்டி மன்னார் மாவட்டத்தின் 174 கமநல சேவை விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து மன்னார் விவசாய சம்மேளனத்தின் தலைமையில் உயிலங்குளம் பகுதியில் மாபெரும் கவனவீர்ப்புப் போரட்டத்தை அண்மையில் மேற்கொண்டனர்.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட விவசாயிகள் ஒன்று திரண்டு இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி வேண்டி போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவர்களுடைய போராட்டத்தில் நாங்களும் முழுமையாக இணைந்துள்ளோம்.

இந்தப் பிரச்சினை மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமல்ல நாடு முழுவதும் காணப்படுகிறது. விவசாயிகளை அரசு கைவிட்டால் இந்த நாடு பெரியதொரு வறுமைக்கு தள்ளப்பட்டு விடும்.

ஆகவே அரசானது உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளின் போராட்டத்தை நிறுத்துவதற்கான செயற்பாட்டில் இறங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள விவசாயநிலம், சேதனப்பசளைக்கு இடம்கொடுக்காத நிலை காணப்படுவதால் திடீரென சேதனப்பசளைக்கு இங்குள்ள நிலத்தை மாற்றுவது ஒரு கடினமான செயற்பாடாகும்.

ஆகவே விவசாயிகள் இந்த நிலத்தை சேதன பசளைக்கு ஏற்ப பக்குவப் படுத்தும்வரைக்கும் விவசாயிகளுக்கு இரசாயனப் பசளையை வழங்க வேண்டும். -என்றார். (ஐ-60)



### வலி.வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட 40 பெண்களுக்கு வாழ்வாதார உதவி

தெல்லிப்பழை,ஒக்.28

வலி.வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் கருவாடுபதனிடும் தொழில் செய்யும் 40 பெண்களுக்கு 24 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பலாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில்வைத்து நேற்று முன்தினம் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துலசேன, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ம.நந்தகோபாலன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவசிறீ, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-26)

### தவிசாளர் எங்கே? அமர்வில் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 28

வலி. மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு பிரதேசசபை மண்டபத்தில் உப தவிசாளர் சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது தவிசாளரை நீண்ட நாள்களாகக் காணவில்லை என்று உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் விஜி மருகன், இரண்டு சபை அமர்வுகளுக்கு அவரைக் காணவில்லை. தொடர்பை ஏற்படுத்தினாலும் அவருடைய அலைபேசி செயலற்று உள்ளது. அவருடைய தற்போதைய நிலை என்ன? என்று கேட்டார். எனினும் இதற்கு பதில் அளிக்காத உப தவிசாளர் சபை நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்தார். (ம-319)

### மத...

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து முதல்வர் தெரிவிக்கையில்,

யாழ். ஆரிய குளச் சுற்றாடலை, மதம் சார்பான ஓர் இடமாக அமைக்கமாட்டோம். மதங்களைக் கடந்து தமிழ் மக்களுக்கான ஓர் இடமாகவே இருக்க வேண்டும். எமது பண்பாட்டுக்கு கலாசாரத்துக்கு முரணாக இந்த இடம் பயன்படுத்தப்படக்கூடாது என்பதுதான் எமது உறுதியான நிலைப்பாடு.

பௌத்த மதத்தை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் அல்லன். இந்த விடயத்தில் மாநகர முதல்வர் என்பதைத் தாண்டி தனிப்பட்ட ரீதியிலும் என்னை சுட்டிக்காட்டி இருப்பதனாலேயே இதனை தெரிவிக்கின்றேன்.

நான் ஒரு சட்டத்தரணியாக செய்கின்ற கடமைகள் வேறு மாநகர முதல்வராக செய்கின்ற கடமைகள் வேறு.

நானொரு சட்டவாளராக, மாநகர சபைக்கு தெரிவாக முன்பு பேசிய வழக்கைச் சுட்டிக்காட்டி, நான் அபிவிருத்தி எனும் பெயரில் நாகவிகாரையை அழிக்க முனைகிறேன் என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

இதுகுறித்து நான் சொல்ல நினைப்பது நான் எந்த மதத்தையும் அழிக்க விரும்புபவன் அல்லன்.

எமது இந்த கௌரவ சபையிலே மூன்று மதங்களை பின்பற்றுபவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே நாங்கள் மற்றைய மதத்தைச் சேர்ந்தவர்களின் மனதை புண்படுத்துகின்றவிதமாக செயற்படமாட்டோம். - என்று மேலும் தெரிவித்தார். (கு-20,27)

### தாழமுக்கம்...

அல்லது இரவு காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் வடக்கு மாகாணத்தில் பரவலாக மழை பெய்யக் கூடும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இந்தத் தாழமுக்கம் திருகோணமலைக்கு கிழக்கு பகுதியில் இன்று காணப்படும். வடமேற்கு திசை நோக்கி நாளை நகரும் தாழமுக்கமானது முல்லைத்தீவுக்கும் வவுனியாவுக்கும் இடைப்பட்ட பகுதியூடாக நகர்ந்து முதலாம் திகதி அன்று மன்னாருக்கும் பூநகரிக்கும் இடைப்பட்ட பகுதியினூடாக மன்னார் வளைகுடா பகுதியில் வெளியேறும்.

இந்தத்தாழமுக்கம் காரணமாக இன்று மாலை அல்லது இரவு முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் கனமழை முதல் மிகக் கனமழையைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும். கடற்பகுதியில் காற்றின் வேகமும் மணிக்கு 40 முதல் 60 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். இதனால் மீனவர்கள் கடலுக்கு பாதுகாப்பாக செல்வது அவசியம்.

தாழமுக்கம் நிலப்பகுதியினூடாக நகரும்போது காற்றின் வேகம் 30 முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். எனவே மக்கள் இது தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியமாகும் - என்றார். (ஒ-5)

### குடும்பஸ்தரின்...

மாய்த்துள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது குடும்பத்தவர்கள் நேற்றுக் காலை எழுந்து பார்த்தபோதே அவர் தூக்கில் சடலமாக தொங்கியதனை அவதானித்தனர்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அந்தத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச்சென்ற தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு-27)

### இந்தியா...

உரத்தை இறக்குவதற்கு சீனா முற்படுகின்றது. இந்த நடவடிக்கையை அனுமதிக்க முடியாது." என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

**"சீன நிறுவனமொன்றிடமிருந்து நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சேதனப் பசளையை, தேசிய தாவரங்கள் தொற்றுநீக்கி தனிமைப் படுத்தும் சேவை நிலையம்** நிராகரித்துள்ளது. இவ்வாறு நிராகரிக்கப்பட்ட உரத்தை பலவந்தமாக நாட்டுக்குள் இறக்க முற்படுவது தவறு. அதேபோல மூன்றாம் தரப் பொன்றை நாடுவதும் தவறு. நிராகரிக்கப்பட்டதை எவ்வாறு மீண்டும் நாட்டுக்கு கொண்டுவரமுடியும்?. சீனாவுக்கோ அல்லது பிற நாடுகளுக்கோ அவ்வாறு செய்யமுடியாது. இந்தியா அன்று பருப்புபோட்டதுபோலவே இன்று பலவந்தமாக உரத்தை இறக்குவதற்கு சீனா முற்படுகின்றது. இது இலங்கையின் இறையாண்மையுடன் தொடர்புபட்ட விடயமாகும்" - என்றார். (கு-44)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 . 10 . 1943 |  | 27 . 10 . 2021 |

## தம்பு திரவியம்

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், விமான நிலைய வீதி, தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு திரவியம் நேற்று (27.10.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை-அருந்தவம் தம்பதியரின் அன்பு மருமகனும், அசுவதியம்மா வின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தம்பாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (28.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் தம்பாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**விமான நிலைய வீதி, தம்பாலை, அச்சுவேலி.**

**தகவல்: குடும்பத்தினர் 077 975 3099 077 3137 129**

(CR 35479 / 01/06)

# பெயர் மாற்றம்

Hindu's School Lane, வல்வெட்டி, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக்கொண்ட **மனோகரன் சுஜீபன்** ஆகிய நான் எனது பெயரை **மனோகரன் சுஜீவன்** என அனைத்து ஆவணங்களிலும் இன்றில் இருந்து பெயர் மாற்றுகின்றேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

(cr.35474) (2.6) **மனோகரன் சுஜீவன்**

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 50 ஆவது அகவை நினைவுகூரலும்

ஜனனம் 16 . 12 . 1971



மரணம் 28 . 10 . 2017

## அமரர் பீற்றர் அன்ரன் யூட்றொபின்

நீக்கமற எம் நினைவெல்லாம்
நிறைந்திருக்கும் நீங்கள்
ஐம்பதாவது அகவை காணும்
இவ் வருடம் தனில்
இறை சன்னிதானத்தில்
என்றும் அமைதியுடன்
இளைப்பாறப் பிரார்த்திக்கும்

**புனித அன்னாள் வீதி, சுண்டிக்குளி.**

**அன்பு மனைவி, மகன்**

(cs.40789) (2.6)

# மரண அறிவித்தல்



## செல்வி சோமசுந்தரம் புவனேஸ்வரி

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், நயினாதீவை வசிப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சோமசுந்தரம் புவனேஸ்வரி நேற்று (27.10.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மகளும், நடராசாவின் (மணி) அன்புச் சகோதரியும், சத்தியேஸ்வரியின் பெறாமகளும், ஜெகநாதன், பிரேமாவதி, சியாமளா, மல்லிகாதேவி, நடேசன், மகேசன், மனோகரி, சபேசன். சுந்தரேசன், சிவகலா, கலாநாதன், யமுனா, காலஞ்சென்றவர்களான ரெத்தினமாலா, தயாளன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான ரமணி, சதானந்தன், சிவனேசன், யோகானந்தன் மற்றும் ஜெயானந்தன், தேவானந்தன், ஜீவானந்தன், யோகராணி சச்சிதானந்தன், இளங்கோவன், காலஞ்சென்ற பகீரதன், சுமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.61/18B, 2 ஆம் ஒழுங்கை, பிரம்படி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 335 5328**

(cs 40793) (2.6)

## இந்திய...

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் இருவரும் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

கடந்த 19ஆம் திகதி காரைநகர் -கோவளம் கடற்பகுதியில் இந்தியப் படகை இலங்கைக் கடற்படை மோதிய நிலையில் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் இருவரை கடற்படையினர் கைதுசெய்து ஊர்காவற்றுறை

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. பாலசுப்பிரமணியம் கரன்**
அவர்களின் அன்புத் தாய்

## பாலசுப்பிரமணியம் மனோன்மணி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்துக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

cs40797) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய பரிபாலகராக (Matron) கடமையாற்றும்
**திரு. குமாரசாமி செந்தில்குமார்**
அவர்களின் அன்புத் தந்தை

## அருணாசலம் குமாரசாமி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்துக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

cs40796) (2.6)

# கண்ணீர் அஞ்சலி



எமது குப்பிழான் வீரமனை கன்னிமா
கௌரி அம்பாள் ஆலயத்தின் முன்னாள்
தொடர் சொற்பொழிவாளராக இருந்த

**வாடா மலர்**

## சுப்பிரமணியம் செல்லத்துரை

சைவப்புலவர், சைவத் தமிழ் இரண்டினதும் பரிநாமத்தின் ஆணி வேராகத் திகழ்ந்தவர். அன்னாரின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லோரும் பிரார்த்திப் போமாக.

**குப்பிழான் வீரமனை கன்னிமா**
**கௌரி அம்பாள் ஆலய**
**நிர்வாக சபையினர் - குப்பிழான்**

cs 40785 (40785)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சிதம்பரம் இராசலிங்கம்

(J.P)

(ஓய்வுபெற்ற ஊழியர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

தோற்றம் 25.01.1934 — மறைவு 07.11.2012

உங்கள் உயிர் எங்களை விட்டுச்
சென்றாலும்
என்றும் நீங்கள் எங்களுடன் தான்
இருக்கின்றீர்கள்
எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
நீங்கள் எங்களுடனேயே வாழ
வேண்டி நிற்கின்றோம்..

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தெல்லிப்பளை அருள்மிகு முத்துமாரி அம்மன் பாதங்களை வேண்டுகின்றோம்.

தற்காலிக முகவரி:
தேவாலய வீதி, சங்கானை.
நிரந்தர முகவரி:
V.C.C. மாவிட்டபுரம், தெல்லிப்பழை

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.
**குடும்பத்தினர்**

(CS 40794 /01/06)

பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த இரு மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு இந்தியாவில் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தநிலையில், ஊர்காவற்றுறை நீதிமன்றால் இரு மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டனர் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (கு-125)

## சிறுமி...

ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிரைமாய்த்துள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பி.ப 1.30 மணி அளவில் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார். இதே பகுதியைச் சேர்ந்த கமல்ராஜ் இலக்கியா (வயது - 14) என்ற சிறுமியே இவ்வாறு உயிரைமாய்த்துள்ளார். பொலிஸார் சடலத்தை மீட்டு, யாழ். போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கு-27)

## 3 பிள்ளைகளுக்கும்...

பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றனர் என்று ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயது தாயே தனது 6, 4, மற்றும் 3 வயதுக் குழந்தைகளுக்கு விஷத்தை பருக்கியுள்ளார்.

தனது குடும்ப வறுமை காரணமாகவே தனது பிள்ளைகளுக்கு விஷத்தை பருக்கி தானும் பருகினேன் என்று தாய், மருத்துவமனையில் தெரிவித்தார் என பதுளை பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பிரதானி பாலித ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளிட்ட பல பொருள்களின் விலையையும் ராஜபக்ச அரசாங்கம் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய பொருள்களின் விலையும் கட்டுக்கடங்காத நிலைக்கு அதிகரித்துள்ளது. அரிசி உள்ளிட்ட பல பொருள்களின் விலை மீண்டும் மீண்டும் அதிகரித்து வருகின்றன. இதனால் தினக்கூலியில் ஈடுபடும் குடும்பங்கள் உட்பட நடுத்தரக் குடும்பங்கள்கூட பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள என்பது குறிப்பிடத்தக்கது. (கு-இ)


**STP® WALK IN INTERVIEW**

Your Partner in IT Solution

STP கணனி நிறுவனமானது கடந்த 25 வருடகாலமாக வடக்கில் கணனி விற்பனை மற்றும் கணனிசார் சேவைகளை அரச, தனியார் நிறுவனங்களிற்கு வழங்கி வரும் ஒரு முன்னணி நிறுவனமாகும்.

இதன் ஆளணி வலுவை விருத்தி செய்வதற்காக தகுதியுள்ள இளைஞர் யுவதிகளின் சேவை கோரப்படுகின்றது.

தெரிவு செய்யப்படுவோர் சிறந்த ஊதியத்தையும் ஏனைய சலுகைகளையும் அனுபவிக்கலாம். கீழே கோரப்பட்ட நியமனங்களிற்கு தாங்கள் தகுதியுள்ளவர் என கருதுமிடத்து 30-10-2021 சனிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு இல 49, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அலுவலகத்திற்கு நேரில் அழைக்கப்படுகின்றீர்கள்

1.Hardware Technician- 3 Vacancy
* ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம்
* வன்பொருள் துறையில் NVQ சான்றிதழ்
* மோட்டார் வாகன ஓட்டுனர் உரிமம்

2 Receptionist- பெண்.
* உயர்தரத்தில் சித்தி
* ஆங்கிலத்தில் புலமை
* மூன்றாம் மொழியறிவு-மேலதிக தகமையாகும்

மேலதிக தகவலிற்கு அழையுங்கள்:
0212228147, 0212222674

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 . 07 . 1973 | 24 . 10 . 2021 |

## Eng நவரத்தினம் முரளீஹரன் (முரளீ)

(Chief information Officer Blue Ocean group of Companies Colombo)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் கல்கிசை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் முரளீஹரன் (முரளீ) கடந்த (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நவரத்தினம் (Rt Senior Tax Assessor inland Revenue Department) இராசநாயகி தம்பதியரின் அன்பு மகனும், பூபாலசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) கனகாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதியரின் பாசமிகு மருமகனும், விஷ்ணுஸ்ரீ (பிரதி அதிபர் - மில்லக்கந்த தமிழ் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், யசோகரன் (பொறியியலாளர் - கனடா), Dr.பிரபாகரன் (இங்கிலாந்து), உமாகரன் (கனடா), லதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருவேணி (கனடா), குகாஜினி (பொறியியலாளர் - இங்கிலாந்து), அனுசா (கனடா), விஷ்ணுகுமாரி (ஆசிரியை யா/புனித சென்திரேசா மகளிர் கல்லூரி - அச்சுவேலி) ஆகியோரின் மைத்துனரும், நக்கீரனின் (Department of Fisheries Killinochi) சகலனும், ஓவிகா, ஜீவிகா, ஜீவன், ஆதித்தியன், சைந்தவி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சுவாதிகா, நாவலன், ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (25.10.2021) திங்கட்கிழமை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொ.பே. இல.: 077 773 3112

(cs 40788) (2.6)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 05 1929 | 24 10 2021 |


## திருமதி.புவனேஸ்வரி தர்மலிங்கம்

மலேசியாவை பிறப்பிடமாகவும் மூளாய் ரோட் வட்டுக்கோட்டை மற்றும் மெல்பேன் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.புவனேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள் கடந்த 24.10.2021 ஞாயிற்றுக்கிழமையன்று மெல்பேனில் இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா, நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகரத்தினம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பத்தினிப்பிள்ளை, செல்வராஜா, சிவனேஸ்வரி, ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும் காலஞ்சென்ற வில்லவராயன் (மெல்பேன்), சரோஜினிதேவி (மெல்பேன்), தேவராயன்- கொழும்பு (இளைப்பாறிய முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாண கிளை), நிர்மலாதேவி (மெல்பேன்), சிவயோகராஜன் (சிட்னி) ஆகியோரின் அன்புத்தாயாரும், புஸ்பராணி (மெல்பேன்), ஸ்ரீபாலச்சந்திரன் (மெல்பேன்), ரவீந்திரி (கொழும்பு), சந்திரசேகரன் (மெல்பேன்), யசோதை (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசன்னா, ரியானா, ஸ்ரீசங்கர், ஸ்ரீசியாம், அபிராமி, அர்ச்சனா, அயந்தன், சுரேஷ், ஜெனனி, கிரிஷான், சாயீஷன், ADEL, CHI, ரம்யா, SUMIT, கஜமுகன், கஜன், சரண்யா, ஆரணி, ஆகியோரின் பேத்தியும், AVA, ARI, ELA, ZANE, MIHIRA, ADHIRA, ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 29.10.2021 மெல்பேன் அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தகவல் – தேவராயன் – மகன் (கொழும்பு) 0773107173

# துயர் பகிர்கின்றோம்



பிறப்பு 31.10.1944 இறப்பு 27.10.2021

எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி.கேதாரகௌரி வரதராஜன்** அவர்களின் அன்புத் தந்தை

## சின்னத்தம்பி இராசதுரை

அவர்களின் மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்**

(CR 35478 / 01/06)

# மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 . 02 . 1941 | 27 . 10 . 2021 |

## திரு.கந்தையா வைரமுத்து (சின்னத்துரை)

மண்டைதீவு ஐந்தாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா வைரமுத்து அவர்கள் நேற்று (27.10.2021) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற வேலாயுதம் - இரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரஞ்சனாதேவி, மஞ்சுளாதேவி, சரோஜினிதேவி, சிவனேஸ்வரன், கோமளாதேவி, சுபாசினிதேவி, குகனேஸ்வரன் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், யோகராசா, பத்மநாதன், யோகராசா, பிறேமசுதா, புலேந்திரநாதன், காளிதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மங்களம், தங்கச்சிப்பிள்ளை (சின்னட்டி அம்மா) நவரத்தினம் (சொக்கர்) ராசமணி, பொன்மலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மங்கயற்கரசி, கமலாதேவி, ஜெகசோதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுதர்சினி, சிவராசு (லண்டன்), உஷாயினி, நிஷாந்தினி, வினோத்குமார், கஜதீபன், லக்ஷனா, லோஜிதன், சந்தீஷன், பிருந்தா, பானுஷன், மதுஷன், டிலக்ஷன், ஜெனார்த்தன், மகேஸ்வரன், அஜந்தினி, சிவலக்ஷன், டிலானி, சியாம், றொப்பிறோன் கஜினா, கனிஷ்கா, தார்மீகன், ஜஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், லகிஷின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்.
077 977 3519

(CS 17872 /01/06)

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் தங்கரத்தினம்



உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தங்கரத்தினம் நேற்று (27.10.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது பூதவுடல் தற்பொழுது வைற்கவுஸ் (White House) பிரதான வீதி யாழப்பாணம் எனும் முகவரியிலுள்ள மலர்ச்சாலை மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக் கிரியைகள் தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புக்கு:
077 187 7076
0777 206 803

(CR 35477/01/06)

## கறுப்பாடுகளை உடனே களையெடுக்கவேண்டும்

*சாகர காரியவசம் எம்.பி*

கொழும்பு, ஒக். 28

“அரசுக்குள் இருக்கும் குழப்பவாதிகளை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையேல் அரசுக்குத்தான் ஆபத்து.” என்று, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் கடந்த 24ஆம் திகதி இரவுநடைபெற்ற ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் 52 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான காரணம் என்னவென்று வினவியபோது காரியவசம் மேலும் தெரிவிக்கையில்;

“ஜனாதிபதி தலைமையிலான ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சிலர் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மைதான். கூட்டத்துக்குச் சமுகமளிக்காதவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களைக் கூறியுள்ளனர்.

சில பங்காளிக் கட்சியினரின் காரணங்கள் விசித்திரமாக உள்ளன. இது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

எனினும், அரசுக்குள் குழப்பவாதிகள் சிலர் இருக்கின்றனர். அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையேல் அரசுக்குத்தான் ஆபத்து. இதைக் கட்சியின் தலைமையிடம் ஏற்கனவே நான் கூறி வைத்துள்ளேன் - என்றார். (கு-22)

## கோத்தபாய....

இலங்கை அரசால் பாதிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறிய 200 இலங்கைத் தமிழர்கள் சார்பாக Global Rights Compliance LLP (GRC) என்ற சட்டவல்லுநர் அமைப்பு மூலமாக ரோமச் சட்டத்தின் 15ஆவது சரத்தின் கீழ் கேய்க் நகர், நெதர்லாந்திலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய, பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் பயங்காரவாத விசாரணைப் பிரிவுகளின் பிரதிப் பொலிஸ்மாஅதிபர் சிசிர மெண்டிஸ், மற்றும் 2002 ஆம் ஆண்டு முதல் இலங்கை பொலிஸின் விசேட அதிரடிப்படைப்பிரிவின் கட்டளை அதிகாரிகளாகச் செயற்பட்டவர்கள் இந்த வழக்கில் எதிராளிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மேலும், இது தொடர்பான விசாரணையை ஆரம்பித்து, 2021 ஒக்ரோபர் 31 முதல் 2021 நவம்பர் 12 வரையில் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் கலந்து கொள்வாரென எதிர்பார்க்கப்படும், நாட்டின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இதர நபர்களில் சிலர் உள்ளிட்ட இலங்கை அதிகாரிகளை சர்வதேச அதிகாரவரம்பு கொள்கையின் கீழ் கைதுசெய்வதற்கான பிடியாணை வெளியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு பிரிட்டன் தேசியப் பொலிஸ் அதிகாரிகளுக்கும் வழக்கின் பிரதிகளை அனுப்பி வைத்துள்ளது.

இந்த முறைப்பாடானது பாதிக்கப்பட்ட 200 பேரின் சார்பாக மட்டுமன்றி, இவ்வாறு பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் சார்பாகவும் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலும் பிரிட்டனிலும் வாழும் ஏராளமான பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வலுக்கட்டாயமாக நாடுகடத்தல், தாயகத்துக்கு திரும்பிச் செல்வதற்கான உரிமையை மறுதலித்தல், துன்புறுத்துதல் ஆகிய மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்கள் பொறுப்பாக இருந்தார்கள் என்ற அடிப்படையில் மேலதிக ஆதாரங்களை இணைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நேரடியாகப் பொறுப்பானவர்களாவர். இந்தக் குற்றங்களின் தீவிரத்தன்மை பாரதூரமானதாக இருந்தும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர்கூட, இலங்கையில் குற்ற விசாரணைக்கோ அல்லது வழக்கு விசாரணைக்கோ உட்படுத்தப்படவில்லை என்றும் சர்வதேச நீதிமன்றுக்கு பொருத்தமான இந்த வழக்குகள் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை என தெரிவித்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில், குறித்த குற்றங்கள் தொடர்ந்தும் நடக்கின்றமையை தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது தாயகம் திரும்பிச் செல்வதற்குரிய உரிமையை உறுதிப்படுத்துவதற்கும், உண்மையைத் தெரிந்துகொள்வதற்கும், தங்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்கியவர்கள் நீதிவிசாரணையை எதிர்கொள்வதைக் காண்பதற்கும், தங்களது இழப்பீட்டுத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்துநரால் விசாரணை ஆரம்பிக்கப்படுவது அத்தியாவசியமானது என பாதிக்கப்பட்டவர்கள் குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர். (த-7)

## தொற்று 559...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 20 பேரில் 11 ஆண்களும், 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 5 ஆண்களும், 3 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்களும், 6 பெண்களுமாக 12 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்று 559 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 38 ஆயிரத்து 320 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 373 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயிரத்து 376 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## ஒரே நாடு...

விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்பதை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கற்றாராய்ந்து, அதற்கான சட்டவரைவை தயாரிப்பதற்காகவும், இது விடயம் தொடர்பில் நிதி அமைச்சால் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவுகள் மற்றும் திருத்தங்களை கற்றாராய்ந்து அவற்றில் திருத்தங்கள் இருப்பின் அதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்காகவுமே குறித்த செயலணி அமைக்கப்பட்டுள்ளது.13 பேரடங்கிய இந்த செயலணியின் தலைவராக ஞானசார தேரரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜீவந்தி சேனநாயக்க செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி செயலணியானது மாதம் ஒரு முறை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

13 பேரடங்கிய இந்த செயலணிக்கு முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டுள்ளபோதிலும் தமிழர் எவரும் உள்வாங்கப்படவில்லை. (த-44)

## ஈழத்தமிழரின்...

ஏற்படாது. சமாதானம் ஏற்படாது. ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் வெறுப்பின் வெளிப்பாட்டைத்தான் காலப்போக்கில் ஜனாதிபதி சந்திப்பார்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பின் 33 ஆம் உறுப்புரையில், ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணியின் தலைவராக நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்று பின்னர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறைத்தண்டனை அனுபவித்ததமிழ்பேசும் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை வெளியிட்டுவரும் ஒருவரை ஜனாதிபதி செயலணியின் தலைவராக எந்த வகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?

13 உறுப்பினர்களைக் கொண்ட இந்த விசேட ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை. இது ஜனாதிபதியின் திட்டமிட்ட செயலா?

ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி குழுக்களை செயலணிகளை நியமிக்கலாம். ஆனால், இவ்விதமான தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் நாட்டினுடைய ஒற்றுமை, சமத்துவம், நீதி, கௌரவம் போன்ற கருமங்களில் மிகவும் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும்.

ஜனாதிபதி இவ்விதமான கருமங்களை நிறைவேற்ற விரும்புவதன் ஊடாக நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. இங்கு புரிந்துணர்வு ஏற்படாது. சமாதானம் ஏற்படுவது மிகவும் கஷ்டம்; அது ஏற்படாது.

ஆனபடியால் ஜனாதிபதி இவ்விதமான கருமங்களைச் செய்கின்றபோது அவற்றை நாட்டு மக்கள் விசேடமாக தமிழ்பேசும் மக்கள் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கக்கூடாது. அதை அவர்கள் வெறுப்பார்கள். அந்த வெறுப்பின் வெளிப்பாட்டை காலப்போக்கில் அவர்கள் வெளிக்கொணர்வார்கள். அதுதான் நிலைமை" என்றார். (த-22)

## கோபுரத்தில்...

முயற்சியில் பொலிஸார் அக்கறையற்றிருந்தனர் என்று குற்றம்சாட்டிய அந்த இளைஞனின் உறவினர்கள் வீதியில் குவிந்ததால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

குறித்த இளைஞர் மல்லாவி பகுதியை சேர்ந்த பெண் ஒருவரை காதலித்து பதிவுத்திருமணம் செய்துள்ளார்.

பின்னர் அவரை அழைத்துக்கொண்டு வவுனியா தேக்கவத்தை பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் சிலகாலம் வாழ்ந்துள்ளார்.

இந்தநிலையில், கடந்த 21 ஆம் திகதி பெண்ணின் உறவினர்கள் குறித்த வீட்டுக்குச் சென்று அந்தப் பெண்ணை வாகனம் ஒன்றில் ஏற்றி அவர்களது வீட்டுக்கு அழைத்துச்சென்றுள்ளனர்.

இந்தநிலையில், தன்னைத்தாக்கிவிட்டு தனது மனைவியை அவர்கள் கடத்திச்சென்றுள்ளனர் என்று குறித்த இளைஞர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும், பொலிஸார் குறித்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்து வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் குறித்த இளைஞர் ஏறி உயிர்மாய்க்கப் போகின்றேன் என்றுகூறியதோடு, கூரிய ஆயுதத்தால் தனது கையை அறுத்திருந்தார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றுகூறி கோபுரத்தில் ஏறிய இளைஞரின் உறவினர்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர். நீண்டநேரமாகியும், இளைஞரை மீட்பதற்கான நடவடிக்கையையும் அவர்கள் எடுக்கவில்லை என குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த மூத்த பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி நாளை (இன்று) தீர்வைப் பெற்றுத் தருவதாக வழங்கிய வாக்குறுதியையடுத்து வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரும் உறவினர்களும் இணைந்து ஒலிபெருக்கி மூலம் வாக்குறுதி வழங்கி தொலைத்தொடர்பு கோபுரத்தில் இருந்து இளைஞனை இறக்கினர். கீழே இறங்கிய இளைஞன் தனது மனைவியை மீட்டுத்தருமாறு பொலிஸாரிடம் மன்றாடினார். அத்துடன் மயக்கமடைந்த அவர், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுமார் மூன்றரை மணித்தியாலங்களாக நடைபெற்ற குறித்த போராட்டத்தால் அந்தப்பகுதியில் பதற்ற நிலையும் சுமார் அரை மணிநேரம் ஏ-9 வீதி ஊடான போக்குவரத்து தடையும் ஏற்பட்டிருந்தது. (த-110,18)

## வவுனியாவில்...

னியா, பழைய பேருந்து நிலையம் முன்பாக நாளை வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

மதவாச்சியில் உள்ள 1330 சிங்கள குடும்பங்களை வவுனியா வடக்கு பிரிவில் இணைத்து இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. தமிழ் மக்களின் நிலத்தையும், இருப்பையும் காக்க தமிழ் மக்களை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிணையுமாறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கோரியுள்ளார். (த-18)

## அருமைநாயகத்தை...

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும், வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் நியமிப்பதற்கு நாடாளுமன்றப் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

வி.சிவஞானசோதியின் மறைவையடுத்து பொதுச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சுந்தரம் அருமைநாயகத்தை நியமிப்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ச முன்வைத்த பரிந்துரைக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய நாடாளுமன்ற பேரவை தனது இணக்கப்பாட்டை வழங்கியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து ஜீவன் தியாகராஜா விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பி.எஸ்.எம்.சார்ள்ஸை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் நாடாளுமன்ற பேரவை தனது இணங்கத்தை வழங்கியுள்ளது. (ம)

# விழிநீர் அஞ்சலி

மண்ணில்
19.07.1973



விண்ணில்
24.10.2021

## அமரர் நவரத்தினம் முரளிகரன்

நம் எல்லோரையும் மீளாத்துயரில் ஆழ்த்தி நம்மை விட்டு மிக விரைவாக இறைவனடி சேர்ந்த ஆருயிர் நண்பன் நவரத்தினம் முரளிகரனுக்கு எம் விழிநீர் அஞ்சலிகள்.

எமதருமை நண்பனின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் நண்பர்கள் உறவினர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

E/93 பேராதனைப் பல்கலைக்கழக
பொறியியல் பீட
நண்பர்கள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

பிறப்பு
17 . 01 . 1939



இறப்பு
28 . 09 . 2021

## அமரர் இளையதம்பி இரத்தினசிங்கம் (பப்பா)

அழியாத அழகு அ(ப)ப்பா!...............
அன்புக்கு இலக்கணமே பப்பா!
எம்மனதில் அழியாத ஓவியம் நீ அப்பா!
காலனின் கட்டளையில் அமைதியாய் போனாயோ?
கடல் கடந்தும் நாம் இங்கு கதறுகின்றோம் பாராயோ!
உன் இறுதிக் காலத்தில் உன்னருகில் நாம் இல்லை
உன் உயிர் பிரியும் போதும் உன் பக்கத்தில் நாம் இல்லை
உன் இறுதிக்கடமையிலும் கலக்காத பாவியானோம்
நம்ப முடியவில்லை பப்பா நீங்கள் உயிரோடு இல்லை என்று!
தாங்க முடியவில்லை நீங்கள் எமை விட்டுப் பிரிந்ததை
மரணம் இயற்கைதான் எனினும் நீங்கள் மரணிப்பீர்கள்
என்று நாம் எதிர்பார்க்கவேயில்லை
பப்பா உங்களுக்கு மட்டும் விதிவிலக்காகியிருக்கக் கூடாதா?
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன் உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்....

கடந்த (28.09.2021) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் இளையதம்பி இரத்தினசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்

(cs.40789) (2.6)

# 1ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்
20.12.2000



மறைவு
08.11.2020

அமரர்
## பாலசுப்பிரமணியம் நிபோஜனா

(யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி - 2019 உயர்தர மாணவி)

ஆண்டொன்று கடந்து விட்டது
நினைவுகளும் வலிகளும்
மறையவில்லை
அன்பினால் பண்பினால்
குணத்தினால் ஆளுமையால்
எம் அனைவரது உள்ளத்திலும்
ஆழமாய் குடியிருந்து விடைபெற்று
சென்றதேனோ?...
ஆல மர விழுதுகள் போல் உன்
ஆயிரம் உறவுகள் இன்று உன்
பிரிவால் தவிக்கின்றோம்.....

கூவில்,
கீரிமலை.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 17856) (2.6)

# பதிவாளர்களுக்கு இன்னொரு பதவி

கொழும்பு,ஒக்.28

பதிவாளர்களுக்கு, சமாதான நீதிவான் பதவியையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறிக்கு ஆலோசனை வழங்கினார்.

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் சங்கத்தின் உறுப்பினர்களுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இந்த ஆலோசனையை வழங்கினார்.

சந்திப்பில் பதிவாளர்களுக்கு காணப்படும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பில் சங்கத்தின் தலைவர் துஷ்மந்த கருணாநாயக்க சுட்டிக்காட்டினார்.

ஊதியம் இன்றி கொடுப்பனவு அடிப்படையில் பதிவாளர்கள் தொழில்சார் சேவையில் ஈடுபட்டிருப்பதுடன், தமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கு சமாதான நீதிவான் பொறுப்பு இன்மை சிக்கலுக்குரியது என்றும் தெரிவித்தார். முறையான காப்புறுதித் திட்டமொன்றை தமக்குப் பெற்றுக் கொடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கமைய பதிவாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய உரிய காப்புறுதித் திட்டமொன்றை ஆராயுமாறு, பதிவாளர் நாயகத்துக்கு, பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

பிறப்பு, இறப்பு பதிவின் போது தற்போது கிடைக்கும் 75 ரூபா கொடுப்பனவை 150 ரூபா வரையும், அலுவலக எழுது பொருள்கள் கொடுப்பனவை 500 ரூபா முதல் 750 ரூபா வரை உயர்த்துவதற்கும், சேவை நிறைவின்போது 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா முதல் 5 லட்சம் ரூபா வரையான பணிக்கொடை கொடுப்பனவை வழங்குவது தொடர்பிலும், 2022 வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (ஒ-4)

# அரையிறுதியை நெருங்குகின்றது இங்கிலாந்து

டுபாய், ஒக். 28

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில், பங்களாதேஷைத் தோற்கடித்து அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பைப் பிரகாசப்படுத்தியுள்ளது இங்கிலாந்து அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. முன்வரிசை வீரர்கள் எவரும் பிரகாசிக்கவில்லை. ஆரம்ப வீரர் லித்தன் டாஸ் 9 ஓட்டங்களுடனும், நயிம் 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். சகிப் அல் ஹசன் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். ரகிம் 29 ஓட்டங்களைப் பெற்றாலும் அதற்காக அவர் 30 பந்துகளை எதிர்கொண்டார். மகமதுல்லா பெற்ற 19 ஓட்டங்கள் ஒருவாறு பங்களிப்பு வழங்க முடிவில் ஒரு மாதிரியாக இந்த கௌரவ நிலையை பங்களாதேஷ் அடைந்தது.

பந்துவீச்சில் மில்ஸ் 3 இலக்குகளையும், லிவிங்ஸ்ரன், மொயின் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர் றோய் அற்புதமாக விளையாடி பலமான அத்திபாரத்தை அமைத்துக்கொடுத்தார். பட்லர் 18 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினாலும் டேவிட் மலன் நிதானத்தை வெளிப்படுத்த பவர் பிளே முடிவடையும்போதே ஆட்டத்தில் வெற்றிபெறும் சமிக்ஞையை வெளிப்படுத்தியது இங்கிலாந்து. 33 பந்துகளில் அரைச்சதம் கடந்து அதிரடியைத் தொடர்ந்தார் றோய். முடிவில் 35 பந்துகள் மீதமிருக்கையில் 8 இலக்குகளால் பங்களாதேஷை வென்றது இங்கிலாந்து. (ம)




## இரணைதீவுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்

பூநகரி பிரதேசசபை உப தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.28

இரணைதீவு மக்களின் போக்குவரத்து நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்று பூநகரி பிரதேச சபை உப தவிசாளர் ம.எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைதீவில் தற்போது குடியேறி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் முழங்காவில் இரணைமாதா நகருக்கும் இரணைதீவுக்கும் இடையில் மது மீன்பிடிப்படகுகளை பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர்.

1992 ஆம் ஆண்டுப் பகுதியில் இரணைதீவுக்கும் முழங்காவிலுக்கும் இடையில் போக்குவரத்து சேவையில் படகுகள் ஈடுபட்டன. பாடசாலை மற்றும் மருத்துவமனை என்பன இயங்கின. தற்போது இரணைதீவில் குடியேறி உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி இல்லாததன் காரணமாக முழங்காவில் வருவதற்கு போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது. இரணைதீவில் குடியேறி உள்ள மக்களின் போக்குவரத்து, மருத்துவ வசதிகளை அதிகாரிகள் உருவாக்க வேண்டும்-என்றார். (ஐ-13)

## வவுனியா வடக்கு பகுதியிலுள்ள இரு குளங்களை சீரமைக்கவும்

*விவசாயிகள் கோரிக்கை*

வவுனியா, ஒக்.28

வவுனியா வடக்கின் மருதங்குளம் மற்றும் இறம்பைக்குளம் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

இருகுளங்களின் அணைக் கட்டுகளைச் சீரமைத்தல், குளங்களை ஆழப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இரு குளங்களின் கீழும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் குளங்களின் அணைக்கட்டுக்கள் சீரமைக்கப்படவேண்டும்.

இதேவேளை- வவுனியா வடக்கின் பல குளங்களின் நீரேந்துப் பரப்பின் காணிகளை பலர் அபகரித்து வருவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. குளங்களின் காணிகளை அடாத்தாக பிடித்தவர்கள் தொடர்பாக விவரங்கள் கமநல சேவை நிலையங்கள் மூலம் திரட்டப்பட்டு வருகின்றன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-13)

*முல்லைத்தீவு மாவட்டத்தின்*

## பல்வேறு பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

முல்லைத்தீவு, ஒக்.28

முல்லைத்தீவு மாவட்டத்தின் செல்வபுரம், மணற்குடியிருப்பு மற்றும் கோவில்குடியிருப்பு ஆகிய பிரதேசங்கள் மழை வெள்ளம் தேங்கி நிற்கும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருவமழை காலத்தில் மேற்படி பிரதேசங்களில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து வெள்ளம் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.

செல்வபுரத்தில் 475 க்கு மேற்பட்ட குடும்பங்களும், கோவில்குடியிருப்பில் 80க்கு மேற்பட்ட குடும்பங்களும், மணற்குடியிருப்பில் 80 க்கு மேற்பட்ட குடும்பங்களும் வாழ்கின்றன. மேற்படி கிராமங்களில் வடிகால்கள் அமைத்து சின்ன ஆற்றில் நீர் வடிந்தோடக் கூடிய வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

முன்னர் நீர் வடிந்தோடும் நிலையில் இந்தக் கிராமங்கள் காணப்பட்டபோதும், வீதிச் சீரமைப்புகளின் போது பொதுஅமைப்புக்களின் ஆலோசனைகள் இல்லாமல் வீதியை உயர்த்தி அமைத்ததன் காரணமாக மழைவெள்ளம் குடிமனைகளுக்குள் புகுந்து கொள்கிறது.

இதன் காரணமாக வெள்ள இடரை மேற்படி கிராமங்களின் மக்கள் எதிர்கொள்கின்றனர்-என்றார். (ஐ-13)

## பாவற் கொழுந்துகளை வெட்டிச்சரித்த விசமிகள்

பளை, ஒக். 28

பளை, தர்மக்கேணிப் பகுதியில் விவசாயி ஒருவரின் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பாவற் கொழுந்துகள் விசமிகளால் வெட்டி சேதமாக்கப்பட்டுள்ளன.

அந்த விவசாயி, தனது வாழ்வாதாரமாக விவசாயத்தையே மேற்கொண்டுவரும்நிலையில் அவருடைய காணியில் பயிரிடப்பட்டுள்ள பாவற்காய் கொழுந்துகள் கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத சில விசமிகளால் வெட்டி வீசப்பட்டுள்ளன. அவ்வாறு சுமார் நூறுக்கும் மேற்பட்ட பாவற் கொழுந்து சேதமாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் மனவேதனை அளிக்கின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்புகள் மற்றும் பசளை தட்டுப்பாடுகள் பசளை விலை ஏற்றங்களுக்கு மத்தியில் விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றோம். அதுகூட பெரும் கஷ்டமாக உள்ளது.



அவ்வாறிருக்கையில், இவ்வாறான ஈனச்செயலால் மனதளவில் பாதிப்படைந்துள்ளோம். எமது வாழ்வாதாரமும் பாதிப்படைந்துள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சமீபகாலமாக இவ்வாறான விவசாயத்தை அழிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இது குறித்த பளை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. என்று பாதிக்கப்பட்ட விவசாயி தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-113)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.